தினமலர் 5/3/2019

# பெண்மையை புரிந்து கொள்ளுங்கள்

## பல்கலை கருத்தரங்கில் வலியுறுத்தல்

கோவை, மார்ச் 5–

அவினாசிலிங்கம் பல்கலை உயர்கல்வி மைய விஷூவல் கம்யூனிக்கேஷன் மற்றும் ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ் அண்டு சோசியல் சயின்ஸ் சார்பில், ஊடகங்களில் பாலின சித்தரிப்பு மற்றும் பிரதிநிதித்துவத்தின் போக்குகள்' எனும், இரண்டு நாள் தேசிய கருத்தரங்கு, நேற்று பல்கலையில் துவங்கியது.

ஓஹியோ கென்யன் கல்லூரி பேராசிரியர் உமா வாங்கல் துவக்கி வைத்தார். இதில், அவர் பேசியதாவது:

பாலின பாகுபாடு என்றாலே, பெண்களின் சிக்கல்கள் தொடர்பானது என்ற தவறான புரிதல் காணப்படுகிறது. பாலினங்கள் குறித்த சித்தரிப்பில், ஊடகங்களின் செயல்பாடுகள் பெரும்பாலும், ஒருவித அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்துவதாக உள்ளன.

பெண்ணியம் பற்றிய முழுமையான புரிதல் ஊடகங்களுக்கும், பொது மக்களுக்கும் முழுமையாக இல்லை. இதனால், தற்போது முகம் சுழிக்கும் சங்கடங்கள், ஊடகங்களில் சாதாரணமாகி விட்டன.

பாலினம் மற்றும் பெண்ணியம் சார்ந்த புரிதல், பள்ளி பருவம் முதலே ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம். இவ்வாறு, அவர் கூறினார். கருத்தரங்கில் விழா மலர் வெளியிடப்பட்டது. ஊடகங்களில் திருநங்கைகள் சித்தரிக்கப்படும் விதம்' குறித்து, திருநங்கை பிரியா பாபுவும், பாலியல் வன்கொடுமை சார்ந்த ஊடக செய்தி சேகரிப்பு மற்றும் வெளியீடு' குறித்து பி.பி.சி., செய்தியாளர் திவ்யா ஆர்யாவும் பேசினர். கருத்தரங்கு இன்றும் நடக்கிறது.

முன்னதாக நடந்த துவக்க விழாவில், பல்கலை வேந்தர் கிருஷ்ண குமார், துணைவேந்தர் பிரேமாவதி விஜயன், பதிவாளர் கவுசல்யா, டீன் கீதா, துறைத்தலைவர் இந்திரா, பேராசிரியர் எழிலரசி உட்பட பலர் பங்கேற்றனர்.



■ கோவை அவினாசிலிங்கம் பல்கலையில், பாலியல் சித்தரிப்பு குறித்த தேசிய கருத்தரங்கம் நடந்தது. இதில் விழா மலரை பல்கலைக்கழக வேந்தர் கிருஷ்ணகுமார் வெளியிட, ஓஹியோ கென்யன் கல்லூரி பேராசிரியர் உமா வாங்கல், பெற்றுக்கொண்டார். **இடமிருந்து:** விஷுவல் கம்யூனிகேஷன் துணை பேராசிரியர் இந்திரா, பல்கலைக்கழக துணைவேந்தர் பிரேமாவதி, பதிவாளர் கவுசல்யா.